# புஸ்பராஜா அண்ணையின் நினைவுகளோடு...!

லக்ஷ்மி

புஸ்பராஜா அண்ணை!

இப்படித்தான் என்னாலும் கலைச்செல்வனாலும் அழைக்கப்பட்டார் - 'ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்' என்னும் வரலாற்றுநூலின் ஆசிரியரான - அண்மையில் எங்களை விட்டுச் சென்ற தோழர் புஸ்பராஜா.

பாரிஸில் இயங்கி வரும் எங்கள் மறுத்தோடி அரசியல் - இலக்கியச் செயற்பாட்டு நண்பர்கள் குழாமில் தோழர் புஸ்பராஜாவும் முக்கியமானவர்.

தோழர் புஸ்பராஜாவுடனான என்னுடைய முதல் தொடர்பு 1992ம் ஆண்டு பாரிஸில் நடந்த இலக்கியச் சந்திப்பில் இருந்து ஆரம்பிக்கின்றது. அதற்கு முன்னதாக வேறு அரசியல் - இலக்கிய நிகழ்வுகளில் அவரைச் சந்தித்திருந்தாலும் அவருடன் சேர்ந்து வேலை செய்யும் சந்தர்ப்பத்தை அவை தந்திருக்கவில்லை. அதற்குப் பின்னராக நடந்த இலக்கியச் சந்திப்புகளிற்கு வேறு ஐரோப்பிய நாடுகளிற்குச் செல்லும்பொழுதும், இலக்கிய நண்பர்கள் வேறு நாடுகளில் இருந்து இங்கு வருகை தரும்பொழுதும் அவருடைய காரில்தான் அநேகமாகப் பிரயாணம் செய்திருக்கிறோம். அந்தப் பிரயாணங்களின்போதான கருத்துப் பரிமாற்றங்களும் சூடான விவாதங்களும் பாட்டுக் கச்சேரிகளும் என்று அட்டகாசமான பயணங்கள், காலங்கள்.

இப்போது காருமில்லை. தோழர்களும் இல்லை. ஒவ்வொருவராக எங்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது நாங்களும் சலிக்காமல் ஒவ்வொருவராக வழியனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

நண்பர்கள், தோழர்கள் எல்லோரும் நன்றாகத் தானே இருந்தார்கள். இதென்ன இது இப்படித் திடீரென்று எல்லோருமே எங்களை விட்டுப் போக முடிவு செய்தார்கள். நாங்கள் ஒரு சபிக்கப்பட்ட பூமிப்பரப்பில் இருந்து வந்து விழுந்து கிடப்பதாய்த்தான் எனக்குத் தோன்றுகிறது. நாங்கள் வாழ்வதற்குச் சபிக்கப்பட்டிருக்கிறோம்.

இதனை எழுதும்போது 'காலச்சுவடு' கண்ணன் அண்மைய மரணங்களைக் கண்டு கேட்கும் கேள்விதான் எனக்கும் கேள்வியாகின்றது. எங்களிடம் மரணம் விடுதூதுதான் என்ன?

மரணம் சொல்லாமல் வருகின்றது.

மரணம் எப்போது வரும் என்பது தெரியாது என்பதும் இப்போது அச்சம் தருகின்றது.

மரணம் எமக்கு அருகிலிருப்பவர்களைத் தேடி வருவதென்பது கிலி நிறைந்ததாகிறது.

மரணம் தேதி குறித்து வருவதென்பது ஒரு வேளை அதனை எதிர்கொள்ளும் துணிச்சலைத் தரக்கூடும்.

இதில் எதுவும் நடக்கலாம். ஆனால் எப்படியும் மரணம் வரும். சொல்லி வருவதும் சொல்லாமல் வருவதென்பதும் மரணத்திற்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் ஒவ்வொரு தடவையும் உடனிருக்கும் நேசிப்புகளின் மரணம் எங்களை உலுப்பித்தான் விடுகின்றது.

மரணம் வரப்போகின்றது என்று முன்கூட்டியே தெரிந்து அதை எதிர்கொண்டவர் தோழர் புஸ்பராஜா. புஸ்பராஜா அண்ணைக்கு ஈரலில் புற்றுநோய் என்று தெரிந்ததும் அவரை உடனடியாகச் சென்று பார்த்தேன். அதற்குப் பின்பு அவரை டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள் என்று தெரிந்ததும் தனியப் போக முடியவில்லை. நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வீட்டிற்குச் சென்று மீண்டும் பார்த்தேன். அதன் பிறகு அவருடன் அடிக்கடி தொலைபேசியில் கதைத்தேன். கதைத்து விட்டு, "பிறகு சந்திப்பம், புஸ்பராஜா அண்ணை!" என்று சொல்லிவிட்டு வைத்த ஒவ்வொரு தடவையும் மனசு கனத்தது. பொய் சொல்கிறேனா என்றுகூட நான் அடிக்கடி என்னைக் கேட்டுக்கொண்டேன்.

பிறகு அவர் சில முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லாதிருந்த போதிலும் அவருக்கு நம்பிக்கை இருப்பது நல்லது தானே என்று மனதைத் தேற்றினேன். சில நாட்களின் பின் ஒரு நாள் நான் வேலை செய்யுமிடத்தில் இருந்தபொழுது எனது கைத்தொலைபேசிக்கு வந்த அழைப்பில் புஸ்பராஜா அண்ணையின் பெயர் பதிவாய் இருந்தது. அதற்கு முதல் சென்றிருந்த இரண்டு நாட்களும் வேலையால் வந்த பின்பு அவருடன் கதைப்பதற்கு முயற்சி செய்தேன். அவர் களைப்பாக இருப்பதாகவும் நித்திரையைக் குழப்ப வேண்டாம் என்றும் நான் நினைத்து அவருடன் கதைக்க முடியவில்லை. கைத்தொலைபேசியில் அவருடைய நம்பர் விழுந்தபோது நேற்று நான் போன் பண்ணியபொழுது கதைக்காததால் இன்றைக்கு போன் பண்ணுகிறார் என்று சந்தோஷத்தில் எடுத்தேன். எதிர்முனையில் புஸ்பராஜா அண்ணையின் மகன் விதுரனின் குரல்.

“லக்ஷ்மி அன்ரி அப்பாக்கு ஹார்ட் நிண்டுட்டுதெண்டு சொல்லுகினம்”. இரண்டு செக்கன் மௌனம் நான். “உனக்கு நான் பிறகு போன்பண்ணுகிறேன்” என்று அவனுக்குச் சொல்லி தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக் கொண்டேன். எந்த வார்த்தையும் வரவில்லை. எதைச் சொல்வது? அந்தச் செய்தி என்னை அதிர வைத்தது. அப்போதுதான் உணர்ந்தேன் “புஸ்பராஜா அண்ணை இன்னும் கொஞ்ச நாளைக்கு எங்களோடை இருக்கத்தான் போறார்” என்று மனசு உறுதியாக நம்பியிருந்திருக்கின்றதென்பதை.

* * * * *

பிரான்ஸில் சபாலிங்கம் அவர்கள் கொல்லப்பட்ட ஐந்தாவது ஆண்டில் (1999இல்) தோழர் புஸ்பராஜாவுடன் இணைந்து “தோற்றுத்தான் போவோமா?” என்னும் தொகுப்பைக் கொண்டு வந்தோம். அதில் முன்நின்று செயற்பட்டவர் தோழர் புஸ்பராஜா.

மார்ட்டின் லூதர் கிங் இன் பின்வரும் மேற்கோளுடன் அந்தத் தொகுப்பு தயாரிக்கப்பட்டது.

“கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க
அவற்றை நல்ல மனிதர்கள் என்போர்
அதிர்ச்சியூட்டுமளவிற்கு
மௌனமாய் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே
நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுற வேண்டும்”

* * * * *

1998ம் ஆண்டு நாங்கள் ‘எக்ஸில்’ சஞ்சிகையைக் கொண்டு வந்தபொழுது அதற்குத் தனது முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்தவர் தோழர் புஸ்பராஜா. இவரது முதல் சிறுகதை ‘எக்ஸில்’ சஞ்சிகையில் வெளிவந்தது. அதற்கு முன்பு அவருடைய இலக்கிய ஆக்கங்களை எங்கும் படித்ததாக எனக்கு ஞாபகத்தில் இல்லை. அதைத் தொடர்ந்து தொடர்ச்சியாக சிறுகதைகள் எழுதினார். கவிதைகள் எழுதுவதிலும் தோழர் புஸ்பராஜா சில முயற்சிகள் செய்திருக்கின்றார்.

‘எக்ஸில்’இலும் பின்பு ‘உயிர்நிழல்’இலும் அவருடைய சிறுகதைகள் வெளியாகி இருக்கின்றன. சென்ற ‘உயிர்நிழல்’இலும் அவருடைய சிறுகதை வெளிவந்தது. “அடுத்த ‘உயிர்நிழல்’க்கு ஒரு சிறுகதை தாறன் லக்ஷ்மி. அநேகமாக முடிச்சிடுவன் எண்டு நினைக்கிறன்” என்று என்னிடம் சொல்லி இருந்தார். அதை எழுதத் தொடங்கினாரா என்று எனக்குத் தெரியவில்லை.

கடந்த வருட இறுதியில் இலக்கியச் சந்திப்பு ஒழுங்குகள்பற்றிப் பேசுவதற்கு அடிக்கடி கூடினோம். பல தடவைகள் என்னிடம் வற்புறுத்திச் சொன்னார் “லக்ஷ்மி ஒருக்கா வீட்டை வாங்கோ ஒரு பார்ட்டி போடுவம்” என்று. விஸ்கி இல்லாத பார்ட்டி இல்லை அங்கு. அவர் வீட்டில் நடக்கும் பார்ட்டிகள் எல்லாவற்றுக்கும் கலைச்செல்வனும் நானும் ஒருமித்துத்தான் செல்லும் சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தன. அப்போது நானிருந்த மனநிலையில் “பிறகு ஒரு தடவை பார்ப்பம். இப்ப என்னால் முடியவில்லை என்று மறுத்தேன். எனக்கிருக்கும் மனநிலையில் ஒருவேளை மற்றவர்களுடைய சந்தோஷத்தைக் கெடுத்து விடுவேனோ என்ற அச்சம் என்னைத் தடுத்தது. அங்கு மீரா மற்றும் பிள்ளைகள் எல்லோருடனுமே மிகவும் நெருக்கமாக உணர்ந்தும் என்னால் செல்ல முடியவில்லை. ஒரு தடவையாவது அவருடைய அழைப்பை ஏற்றுச் சென்றிருக்கலாமோ என்று இப்போது மனதுக்குச் சுமையாக இருக்கின்றது.


Photo : THAMAYANTHY

* * * * *

தோழர் உமாகாந்தன் 2004ம் ஆண்டு இறுதியில் எங்களை விட்டுச் சென்றபோது கலைச்செல்வன் தன்னுடைய குறிப்புப் புத்தகமொன்றில்,

**செவ்வாய்க்கிழமை**
28/09/2004
***இன்று காலை உமாகாந்தன் மறைந்துவிட்டார் என்ற செய்தி வந்தது.***
***நம்ப முடியவில்லை***
***மரணம் கொடியது***
***மரணம் மகத்தானது***
***அது புனிதமானது***

(இது எழுதப்பட்டு ஒரு வருடத்தின் பின் இதனை நான் படிக்க நேர்ந்தது)

* * * * *

அண்மைக்காலமாக, நெருங்கியவர்களுடன் பேசும்பொழுது, மரணம்பற்றி நான் ஏதாவது கூறினால் “அதுவும் வாழ்வின் ஒரு அம்சம்தான். இவற்றைக் கடந்துதான் நாங்கள் செல்லவேண்டும்”என்கிறார்கள். எல்லாமே எழுதுவதற்கும் பேசுவதற்கும் சரியாகத்தான் இருக்கின்றது. ஆனால், அவற்றுடன் கூட வாழ்வதென்பதெல்லாம் தத்துவங்களிற்கு அப்பாற்பட்டதாகத்தான் தெரிகின்றது. இப்போதெல்லாம் புத்தகக் கடைகளிற்குச் சென்றால் அங்கு தேடும் விடயங்கள் மரணம் தொடர்பானதாகவே இருப்பது எனக்கு வழக்கமாகி இருக்கின்றது. அப்படியானதொரு வேளையில் சென்ற வாரம் புத்தகக் கடையில் மரணம்பற்றி வெவ்வேறு தத்துவவியலாளர்களும் இலக்கியவாதிகளும் கூறியவைகள் கொண்ட ஒரு பிரெஞ்சுமொழிச் சஞ்சிகையை வாங்கினேன். வீட்டிற்கு வந்ததும், அநேகமான சமயங்களில் எல்லாவற்றையும் சகஜமாகப் பகிர்ந்து கொள்வதுபோல் நான் வாங்கிய சஞ்சிகையில் உள்ள பிரதானமான விடயம் பற்றி மகன் கபிலனிடம் சொன்னேன். அவன் உடனே “அந்த விடயதானம் அப்படி ஒன்றும் சந்தோஷம் தரும் விடயமல்ல” என்று சொன்னான். அதன் பின்பு நான் அதுபற்றி அவனுடன் எதுவும் பேசவில்லை. மரணங்கள் எப்போதுமே உவப்பானதல்ல.

22/04/2006